

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முன்னிட்டு, சென்னை மாவட்ட தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு குரு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ரூ.1 கோடியே 10 லட்சத்திற்கான மானியங்களை தொழில் முனைவோர்களுக்கு வழங்கினார்.விழாவில் ஏழில் கிரீன் எனர்ஜி உரிமையாளர் மற்றும் விக்னேஷ் எலக்ட்ரிகல்ஸ் மேலாண் இயக்குனர் சிவக்குமார் ஆகியோர் அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தனர்.

மாவட்டப் பிரதிநிதி சைதை எஸ்.ராதாகிருஷ்ணன் ஏற்பாட்டில்

## சைதை 169 'அ' வட்டம் ஜோதியம்மாள் நகரில் மதிய உணவு!

### சோ.முருகையன் தலைமையில் எஸ்.குணசேகரன் வழங்கினார்!

சென்னை, டிச. 1 -

தொடர் மழை காரணமாக சைதை 160 அ வட்டம் ஆற்றோரம் உள்ள ஜோதியம்மாள் நகர் வாழ் மக்களுக்கு மாவட்டப் பிரதிநிதி சைதை எஸ். ராதாகிருஷ்ணன் ஏற்பாட்டில் மாவட்ட அவைத்தலைவர் எஸ். குணசேகரன் உணவு வழங்கினார்.

சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க சைதை கிழக்கு பகுதி கழகச் செயலாளர் இரா. துரைராஜ் அறிவுறுத்தலின்படி சைதை கிழக்கு பகுதி 169 அ வட்டம் ஜோதியம்மாள் நகரில் சென்னை தெற்கு மாவட்ட பிரதிநிதி சைதை எஸ்.ராதாகிருஷ்ணன் ஏற்பாட்டில் 169 அ வட்ட துணை செயலாளர் சோ.முருகையன் தலைமையில் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு இரண்டாவது கட்டமாக சென்னை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன் மதிய உணவு வழங்கினார்.

அதுபோது பகுதி துணை செயலாளர் மு.பாக்கியலட்சுமி, மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு மாவட்ட தலைவர் எஸ்.கரிமுல்லா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர் எஸ் குணசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய குரோம்பேட்டை, பல்லாவரம், கீழ்க்கட்டளை, ஜமீன்ராயபேட்டை, அஸ்தினாபுரம், நெமிலிக்சேரி உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்ததையடுத்து சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட துணைச் செயலாளருமான இ.கருணாநிதி நேற்று சென்று ஆய்வு செய்து மழைநீர் வடிய துரித நடவடிக்கை மேற்கொண்டார்.

திருவள்ளூர் மாவட்ட தொழில் மையம் சார்பாக நடைபெற்ற

## மாவட்ட அளவிலான தொழில் முதலீடுகள் மாநாடு கருத்தரங்கு!

### அமைச்சர் ஆர்.காந்தி பங்கேற்பு!

திருவள்ளூர், டிச. 1-

திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் மாவட்ட தொழில் மையம் சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான தொழில் முதலீடுகள் மாநாடு கருத்தரங்கு நடத்துகிறது.

இந்த நிகழ்ச்சிக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டர் த.பிரபு சங்கர் முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் ஆர்.காந்தி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு வரும் ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநாட்டின் கருப்பொருளானது "மீள் திறனுடன் நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி" அடைவதில் இம்மாநாடு முக்கிய பங்கு வகிக்கும்.

இந்த முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனங்களுக்கு அனைத்து விதமான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் ஆகியவற்றை அனைத்து துறைகளிடமிருந்து விரைவாக உரிய காலத்தில் பெற்றிட ஒற்றைச் சாளர தகவு வழியாக பெற்றுத் தர மாவட்ட தொழில் மையம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் நிலவும் தொழில்துறைக்கு உகந்த சூழல் அமைப்பு மேம்பட்ட உட்கட்டமைப்பு திறமை வாய்ந்த பணியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு வழங்கப்படும் முக்கியத்துவம், வணிக ரீதியான வசதி வாய்ப்புகள் ஆகியவற்றை தொழில்துறையில் முதலீடு செய்வதற்கு சிறந்த வாய்ப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான நமது அரசு வழங்கி வருகிறது.

விண்வெளி தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, ஆட்டோமொபைல், மின்சார வாகனங்கள், ஜவுளி தரவு பகுப்பாய்வு மற்றும் மேம்பட்ட பொருட்கள் உட்பட பல்வேறு துறைகள் அரசிடமிருந்து சிறப்பு கவனம் மற்றும் ஆதரவை பெற்று முதலீட்டு வாய்ப்புகள் பெற்றிட உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 முக்கிய தளமாக செயல்படும்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி கூறினார்.

இந்தக் கருத்தரங்கத்தில் ரூ.822.83 கோடி மதிப்பீட்டில் 3,912 வேலைவாய்ப்புகளுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் 20 நிறுவனங்களின் முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கருத்தரங்கத்தில் 20 தொழில் நிறுவனங்கள் சார்பாக 3,912 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் ரூ.822.83 கோடி மதிப்பீட்டில் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இக்கருத்தரங்கத்தில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக மீண்டும் மஞ்சப்பை திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 400 மஞ்சப்பைகளை இலவசமாக வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவள்ளூர் வி.ஜி.ராஜேந்திரன், மாதவரம் எஸ்.சுதர்சனம், மதுரவாயல் க.கணபதி, கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் என்.ஒ.சுகபுத்திரா, மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் அ.சேகர், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய செயற்பொறியாளர் ப.ரவிச்சந்திரன், முன்னோடி வங்கி மேலாளர் அருள்ராஜா, உள்ளாட்சி பிரதிநிதிகள், பல்வேறு தொழில் நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்! ச.சங்கர் கணேஷ் எம்.சி. ஏற்பாட்டில்

## 151வது வார்டு அரசு பொதுமருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அணிவிக்கிறார்! காரம்பாக்கம் கணபதி - ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா பங்கேற்பு!

சென்னை, டிச.1-

சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி தி.மு.க சார்பில் இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச.சங்கர் கணேஷ் ஏற்பாட்டில் (இன்று 01.12. 2023, வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில், மதுரவாயல் தெற்கு பகுதி,151வது வார்டு, சின்ன போரூரில் அமைந்துள்ள அரசு நகர்புற பொது மருத்துவமனையில் 27.11.2023 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணியும் நிகழ்ச்சியும், அதே மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள அரசு தத்தெடுத்து நடத்துகின்ற பாதை அதர்வற்ற இல்லத்தில் வசிக்கின்ற குழந்தைகளுக்கு புத்தாடைகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியை மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் துவக்கி வைக்கிறார்கள்.

இந்நிகழ்வில் மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, வில்லிவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ.ம. துரைவீரமணி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வக்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். விநாயகமூர்த்தி, செ. இரவி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.பாண்டியன், கா.வீ. தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ், பகுதி கழக நிர்வாகிகள் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், திருமதி. பாரதி அண்ணாவேலன் எம்.சி, கே.ராஜு எம்.சி, மதுரவாயல் தெற்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. செல்வி ரமேஷ், திருமதி. ஹேமலதா கணபதி, திருமதி. சாந்தி இராமலிங்கம், வட்டக் கழக செயலாளர் அ.மோசஸ், எஸ்.ரமேஷ்ராஜ், டி.ரமேஷ், சி.சுந்தர், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி. சார்லஸ், ஆ.இராதா செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் வி. விஜயன், சேகர்,

151-வது வட்ட கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் செ. இராமையா, துணை செயலாளர்கள் ம.சிவா, கி.ஜி. முரளி, விமலா சேகர், பொருளாளர் வி.பன்னீர்செல்வம், வட்ட பிரதிநிதிகள் கோ.கண்ணதாசன், முரளி கிருஷ்ணன், கி.குமார், ப.சரவணன், மோ.சுந்தர், இளைஞரணி பகுதி அமைப்பாளர் எம்.பி. நவராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வினோத், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.இராஜேஷ், இரா.பா. உதயகுமார், மு.மகேஷ்குமார், பிரசாந்த், எ.மதன்குமார், அன்பரசன், ஜெ. ஹேமசந்திரன், சரவணன், செந்தில்குமார், முரளி கிருஷ்ணன், ஜனார்த்தனன், சபரிராஜா, டி.மனீஷ் உள்ளிட்ட வட்ட, கிளை இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் மற்றும் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

வருகை புரிந்த அனைவருக்கும் ஏ.செந்தில் குமார் நன்றி கூறுகிறார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி பேரூராட்சிக்கு உட்பட்ட இடங்களில் மழைநீர் சூழ்ந்த பகுதிகளை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பார்வையீட்டு மழைநீர் வடிவதற்கான வடிகால் பணிகளை விரைந்து செய்திடுமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ்,இரா.அறிவழகன், மு.பாஸ்கர், எஸ்,ராமஜெயம், சகிலாஅறிவழகன், கேசவன், இரா.ரமேஷ், கே.என்.பாஸ்கர், குப்பன், இஸ்மாயில், அப்துல்கரீம், டி.கே.ராஜா, கர்ணா, குமார், கோபி, சாண்டில்யன், கே.ஜி.நமச்சிவாயம், சுரேஷ், மணி, அங்கமுத்து, காமாட்சி, போண்டாசிவா, செந்தில், பி.அறிவழகன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மாதவரம் செட்டிமேடு, கடப்பாக்கம் பகுதிகளில்

## மழைநீர் பாதிப்பு சீரமைக்கும் பணி!

### புழல் எம்.நாராயணன் தலைமையில் கழகத்தினர் தீவிரம்!

சென்னை, டிச.1-

தமிழ்நாடு முழுவதும் பெய்து வரும் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கழக நிர்வாகிகளும், உள்ளாட்சி பிரதிநிதிகளும் நேரடியாக சென்று களப்பணி செய்ய வேண்டும் என்று, தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டதன் பேரில், மாதவரம் வடக்கு பகுதி முழுவதும் கழகத்தினர் தீவிரமாக களப்பணி ஆற்றி வருகிறார்கள்.

சமீபத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாகவும் புழல் ஏரியிலிருந்து திறந்து விடப்படும் உபரி நீரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண பணிகளை கழகத்தினர் தீவிரமாக களப்பணி செய்து துரிதப்படுத்தி வருகிறார்கள்.

17-வது வட்டம் செட்டிமேடு டாக்டர் அம்பேத்கர் நகர் பகுதியில் உள்ள சுமார் 60 வீடுகளில் நீர் சூழ்ந்து காட்சி அளித்தது. இந்த பகுதியில் இரவு முழுக்க சென்னை மாநகராட்சி ஊழியர்களும் கழக நிர்வாகிகளும் துரிதமாக செயல்பட்டு நீரை வடிய வைக்கும் பணியிலும் தண்ணீர் புகுந்த வீடுகளுக்குள் இருந்தவர்களை சமுதாய கூடத்தில் தங்கவைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள். பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்டச் செயலாளர் கே.கருணாகரன் மற்றும் கழகத்தினர் பலர் கலந்துகொண்டு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார்கள்.

அதேபோல அரியலூர் பகுதியில் சூழ்ந்த நீர்களை வெளியேற்றும் பணியில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஜே.சி.பி. இயந்திரங்களை கொண்டு கால்வாய் வெட்டி தற்காலிகமாக மழை நீரை வடிய வைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். கழக நிர்வாகிகள் டி.வினோத், கே.ராஜ்குமார், எஸ்.நாகராஜ், ஆனந்த் மற்றும் பலர் இந்த பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு களப்பணியாற்றி வருகிறார்கள்.

16வது வட்டம் கடப்பாக்கம் சத்திரமேடு கன்னியம்மன் பேட்டை ஆகிய பகுதிகளில் கடப்பாக்கம் ஏரி பகுதியிலிருந்து வழிந்து ஓடும் நீரால் அங்கு ஏற்பட்ட பாதிப்புகளை வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன், மாவட்ட பிரதிநிதி நா.மோகன் குமார் நாகூரார், நீதி மற்றும் கழகத்தினர் பார்வையிட்டு ஆய்வு செய்து சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் பணியாளர்களின் ஒத்துழைப்போடு மழை நீர் வடியவைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும் மழைநீர் வடியாத இடங்களில் கழகத்தினர் சுறுசுறுப்புடனும் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி செயல்பட்டு வருகிறார்கள்.

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு

## சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழைநீர் அகற்றம்!

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, டிச.1-

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 325 கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 22 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடுகள் 29.11.2023 இரவு முதல் அனைத்து அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு கழிவுநீரகற்றும் பணிகள், மழைநீரை அகற்றுதல் மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்றும் பணிகள் துரிதமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 15 மண்டலங்களில் சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு அனைத்து பணிகளையும் ஒருங்கிணைப்பதோடு கண்காணிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்து கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்படுவதோடு ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு நிலையத்தின் செயல்பாடுகள் தொய்வின்றி மேற்கொள்ளப்படுவதை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மின்மோட்டார்கள் பழுதாகும் பட்சத்தில் மாற்று மின் மோட்டார்கள் பொருத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கழிவுநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்காக 300 தூர்வாரும் இயந்திரங்கள், 66 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், 176 ஜெட்ராடிங் வாகனங்கள் என மொத்தம் 542 கழிவுநீரகற்றும் இயந்திரங்கள் கழிவுநீரகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளை 2,149 களப்பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

மழைநீர் தேங்கிய பகுதிகளில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் தேவையான அளவு குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதை பயன்படுத்தும் முறைகள் குறித்தும் பொதுமக்களுக்கு களப்பணியாளர்களால் விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து தலைமைப் பொறியாளர்கள், அனைத்து மண்டல மேற்பார்வைப் பொறியாளர்கள், பகுதிப் பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை அலுவலர்களும் 29.11.2023 அன்று இரவு முதல் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். மேலும், சாலைகளில் உள்ள மழைநீர் குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீர் ஆகியவற்றை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து வெளியேற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கழிவுநீரை அகற்றுவதோடு மட்டுமல்லாமல், சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரினை அகற்றும் பணிகளையும் சென்னை குடிநீர் வாரிய அலுவலர்கள் / பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு 1000 எம்.எல்.டிக்கு மேலாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தினசரி 300 இடங்களில் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு குடிநீரின் தரம் ஆய்வகம் மூலம் பரிசோதிக்கப்பட்டுவரும் நிலையில் வடகிழக்குப் பருவமழையின்போது நாளொன்றுக்கு 600 இடங்களில் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்பு பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்வதற்காக தினந்தோறும் குடிநீர் மாதிரிகள் சாதாரண நாட்களை விட அதிக அளவில் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது.

குடிநீர் விநியோக நிலையங்களில் குடிநீரில் தேவையான அளவு பிளீச்சிங்பவுடர், படிகாரம், சுண்ணாம்பு போன்ற பொருட்கள் சேர்த்து வழங்கப்படுகிறது. குடிநீர் விநியோக நிலையங்களில்(WDS) பெரிய நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் சிறிய நீர் உறிஞ்சும் மற்றும் ஜெனரேட்டர்களைக் கொண்டு தேங்கும் மழைநீர் இறைக்கப்படுகிறது. குடிநீர் விநியோக நிலையங்களிலும், கழிவு நீரிறைக்கும் நிலையங்களிலும் மணல் மூட்டைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் தொடர்பாக புகார்கள் தெரிவிப்பதற்கு ஏதுவாக 24 மணி நேரமும் இயங்கக்கூடிய கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தை தொடர்பு கொள்வதற்கு பொதுமக்கள் 044-4567 4567 (20 இணைப்புகள்) மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண்.1916-ல் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு தெரிவிக்கப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், சமூக ஊடகங்களில் பெறப்படும் புகார்களும் உடனடியாக சரி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில், சாலைகளில் தேங்கியுள்ள மழைநீர், கழிவுநீர்க் குழாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகள், இயந்திர நுழை வாயில்களில் ஏற்பட்டுள்ள சேதாரம், கழிவுநீர்ப் பாதைகளில் மழைநீர் கலந்தது, குடியிருப்புகளுக்குள் மழைநீர் புகுந்தது போன்ற புகார்கள் 29.11.2023 இரவு முதல் தற்போது வரை 1170 புகார்கள் பெறப்பட்டுள்ளது. தற்போது வரை 784 புகார்கள் சரி செய்யப்பட்டு மீதமுள்ள புகார்கள் தொடர்ந்து சரி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.




சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி சார்பில் நீட் எதிர்ப்பு மாபெரும் கையெழுத்து முகாமை கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர் பி.டி.பாண்டிசெல்வம், ஆர்.எம்.டி. ரவீந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லயோலா கே.மதன், இர. பொன்இளவரசன், இ.ரவிகுமார்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் வணிகர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு நீட் தேர்விற்கு எதிராக கையெழுத்திட்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். குணசேகரன்

**டிசம்பர் 1 (2021)**



**மாணவப் பருவத்திலேயே, மாணவர் அணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், என்.மோட்டூர் கிளைச் செயலாளர், நான்கு முறை மத்தூர் ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**சமூக சேவையாற்றியதன் காரணமாக 'சமூக விருதுகள்' பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**